**செ. கு. எண்: 148** **நாள்: 21.08.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 21.8.2018

**வைகை அணையின்** வலதுபுற கரையிலிருந்து **மதுரை மாவட்டம்** உசிலம்பட்டி வட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் பகுதியிலுள்ள கண்மாய்களுக்கு செல்லும் **58** கிராம புதிய கால்வாய் பணிமுடிவுற்றதையடுத்து சிறப்பு நிகழ்வாக கருதி சோதனை ஓட்டத்திற்கு (Trial Run) தண்ணீர் திறந்துவிட ஆவன செய்யுமாறு எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வைகை அணை **69** அடியை எட்டி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி **300 மி.க.அடி** தண்ணீரை **22.8.2018** அன்று முதல் முறையாக **சோதனை ஓட்டத்திற்காக** (Trial Run) வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்தில் உள்ள **228.86 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**